# Half day லீவு விட்டா, Full day CL போடனுமா?

**- செல்வ.ரஞ்சித் குமார்**

தீபாவளியை முன்னிட்டு 30.10.2024 பிற்பகல் கல்வி நிறுவனங்களுக்கு விடுமுறை என்று தமிழ்நாடு அரசு அறிவிக்கை வெளியிட்டுள்ளது.

அதாவது தமிழ்நாடு அரசின் செய்தி வெளியீடு எண்.1818 நாள்.29.10.2024ல் பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் கல்வி நிறுவனங்கள் நாளை (30.10.2024) முற்பகல் மட்டும் செயல்படும். *பிற்பகல் அரை நாள் விடுமுறை அறிவித்து தமிழ்நாடு அரசு உத்தரவிட்டுள்ளது* என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது, அந்த அறிவிப்பின்படி 30.10.2024 Afternoon Half Day Holiday என்று அரசே தெரிவித்துள்ளது.

என்னடாயிது மேஜர் சுந்தர்ராஜன் மாதி சொன்னதையே சொல்றானேனு நினைக்காதீங்க. அப்புடிச் சொன்னாலாவது நம்ம மக்களுக்கு விசயம் புடிபடுமானு நினைச்சுத்தேன் திரும்பத் திரும்ப சொல்லுறேன். திரும்பவும் சொல்றேன்.

30.10.2024
Half Day : Forenoon - Working Day
Half Day : Afternoon - Govt. declared Holiday

இதுல ரெண்டு நேரமும் கையெழுத்து போடுனு ஒரு உருட்டு. அந்த உருட்டை வைத்து அப்டீனா 1 Day CL கணக்குல சேரும்னு இன்னொரு உருட்டு.

நீங்க எத்தன கையெழுத்து வேணும்னாலும் போட்டுக்கங்க. ஆனால், தமிழ்நாடு அரசு அறிவிக்கையின் படி முற்பகல் மட்டுமே அதாவது அரை நாள் மட்டுமே வேலை நாள் என்பதால் முற்பகலுக்கு மட்டும் தான் கையெழுத்து இட வேண்டும். பிற்பகல் கையெழுத்திடக் கூடாது.

எனவே, *தற்செயல் விடுப்பு எடுப்போர் அரை நாளுக்கு மட்டும் விண்ணப்பித்தால் போதும்.*

அதெல்லாம் முடியாதுனு சொன்னா, 01.11.2024க்கும் அரசு விடுமுறைதான் சொல்லியுள்ளது என்பதால் அதையும் சேர்த்து 30, 01, 02, 03 என்று 4 நாள்களுக்கு CL விண்ணப்பிச்சுடுங்க.

நீ என்னடா லூசுத்தனமா Govt. Leaveக்கு எல்லாம் CL எடுக்கச் சொல்றனு, அறிவா கேட்கத் தோன்றினால். . . .

அதே அறிவோட, அக்.30 பிற்பகலும் அரசு அறிவித்த விடுமுறை தான் என்பதால் பிற்பகலுக்கு CL போடாதீங்க. போடச் சொல்றவுகளுக்கு அவுகளுக்குப் புரியுறமாதி பாடம் எடுங்க.

*இருக்குற தொயரத்துல இது வேற!*